Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 07, 2025

வியாழக்கிழமை 07, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 023 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## கோப் தலைவர் இராஜினாமா



தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த சேனாரத்ன, பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் (COPA) தவிசாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கோபா தலைவர் பதவியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதை தொடர்ந்து, தனது முடிவு எடுக்கப் பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சேனாரத்ன ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

அந்த செயல்முறை நடைபெற அனுமதிக்கவே தான் பதவி விலகுவதாக அவர் கூறினார்.

### தமிழின அழிப்புக்கான

# “ஆயுதத்தை நீக்கவும்”



தமிழின அழிப்புக்குப் பிரதான ஆயுதமாகவிருந்த பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்துக்கு மாற்றாக, பிறிதொரு சட்டம் இயற்றப்படக் கூடாது என தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம்.பி. கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

மேலும், பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். கடந்த அரசாங்கங்கள் அனைத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அச்சட்டத்தையே செயற்படுத்தின. இதனால் பாரிய விளைவுகள் மக்களுக்கு ஏற்பட்டன.

கடந்த அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சித்த போது தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதற்கு அப்போது கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாறாக பிறிதொரு சட்டத்தை உருவாக்கக் கூடாது என்று குறிப்பிட்டார் இந்த நிலைப்பாட்டில் தான் நாங்களும் இருக்கின்றோம்.

இந்த நாடு பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பில் சீரழிவதற்குப் பயங்கரவாத தடைச்சட்டம் பிரதான காரணமாக அமைந்தது. ஜே வி.பியின் தலைவர் ரோஹன விஜேவீரவும், அதன் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாகவே கொல்லப்பட்டார்கள். ஆகவே, ஜே.வி.பியின். இந்நாள் தலைவரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்த சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்.

அதேவேளை, அந்தச் சட்டத்துக்கு மாற்றாக பிறிதொரு சட்டம் இயற்றப்படக் கூடாது என்றார்.

# ‘ஒன்றாக – கைவிடாத’...



‘ஒன்றாக – கைவிடாத’ என்ற தேசிய கொள்கைக்கு இணங்க, மாற்றுத்திறனாளிகளின் அழகியல் திறமைகளை தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘சித் ரூ-2025’ கலை நிகழ்ச்சி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் செவ்வாய்க்கிழமை (05) அன்று நடைபெற்றது.

## “ட்ரம்பின் வழியில் செல்கிறது ஜே.வி.பி.”



ஜே.வி.பி. தமது தலைவரான ரோஹன விஜேவீரவின் கொள்கையை மாற்றி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை தமது தலைவராக ஏற்றுக்கொண்டு அவரது கொள்கையை முழுமையாகப் பின்பற்றுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மண்ணுக்குள் சிக்கிய அறுவர் பத்திரமாய் மீட்பு



செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, ராணி தோட்டத்தில் புதன்கிழமை (06) காலை 11.45 மணி அளவில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அடித்தளம் வெட்டிக் கொண்டிருந்த வேளையில், திடீரென மண் திட்டுகள் சரிந்ததால் மண்ணில் புதையுண்ட ஆண்கள் அறுவர், பிரதேச வாசிகளின் உதவியுடன் மீட்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## பிறப்பு வீழ்ச்சியால் சரிந்தது 1ஆம் தரம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 360,000 ஆக இருந்த 1ஆம் தரத்துக்கான மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 298,000ஆகக் குறைந்துள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பிறப்பில் ஏற்பட்ட குறைவு இதை முக்கியமாகப் பாதித்துள்ளது, மேலும் கணிப்பின்படி, இந்த எண்ணிக்கை 2030ஆம் ஆண்டுக்குள் 196,209ஆக இருக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### அரசாங்கத்தில்

## “மோசடி உறுதியானால் விசாரணை நடக்கும்”



`எமது அரசாங்கத்தில் யாராவது ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று பிரதமரிடமான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## “சவூதியின் சுனாமி வீடுகள் உயர் நீதிமன்றில் உள்ளது”

சவூதி அரசாங்கத்தின் நிதியில் அக்கரைப்பற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 500 சுனாமி வீடுகளை அம்பாறை மாவட்டத்தின் இன விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கினால் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல்



இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்தை ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தமை குறித்த விசாரணை தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் புதன்கிழமை (06) கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ,

தொடர்ச்சி P2

### மின்சார சபையில் ஊழியர்களின் எண்ணிக்கை

## “23,000 இலிருந்து 12,000 ஆகியிருக்கும்”

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த மின்சார சட்டத்தை செயற்படுத்தினால் மின்சார சபையின் 23,000 சேவையாளர்களின் எண்ணிக்கையை 12,000ஆக குறைக்கும் சூழலே காணப்பட்டது. புதிய சட்டமூலத்தில் மின்சார சபையின் சகல ஊழியர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்படும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## போகும் இடத்தை மறந்த சாகல



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க, குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குப் புதன்கிழமை 06) காலை சென்றுள்ளார்.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அவர் தவறுதலாகச் சென்றுள்ளார். பின்னர், அங்கிருந்து வெளியேறி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் அவர் முன்னிலையானார்.

## “வழக்குகளின் தரவுகள் கிடையாது”



2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படு கொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்வித தரவுகளும் கிடையாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

## 19 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சண்முகம் தவசீலன்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 19 பேருக்கு எதிரான வழக்கு விசாரணை 2025 அக்டோபர் 29ஆம் திகதிக்கு தவணை இடப்பட்டது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடைபயணி போராட்டத்தில் கலந்து கொண்ட மல்லாவி வர்த்தகர்கள், மல்லாவி இளைஞர்கள் உள்ளிட்ட 19 பேருக்கு மாங்குளம் நீதிமன்றினால் அழைப்பாணை வழங்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் பொத்துவில் இருந்து யாழ்ப்பாணம் மாவட்டம் பொலிகண்டி நோக்கிய பேரணி 2021 பெப்ரவரி 3ஆம் திகதி அன்று ஏற்பாடு செய்யப்பட்டது,

குறித்த பேரணி மல்லாவி பகுதியில் வருகை தரும் பொழுது மல்லாவி

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ட்ரம்பின் வழியில் செல்கிறது ஜே.வி.பி.”



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்ற இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், ட்ரம்பின் வழியிலேயே இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த சட்ட மூலம் ஊழல் மோசடிக்கு வழிவகுக்கும்.என்பதனால் இந்த சட்டமூலத்தை ஏற்கமுடியாது என்றும் கூறினார்.

மேலும், அரசாங்கம் தற்போது சமர்ப்பித்துள்ள இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலத்தில் இலங்கை மின்சார சபையின் தனியுரிமை முழுமையாகத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன், தீர்மானம் எடுக்கும் உரிமை தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படவுள்ளது. எனவே, இது ஊழல் மோசடிக்கு வழிவகுக்கும். ஆகவே, இந்த சட்டமூலத்துக்கு எதிராகவே நாம் வாக்களிப்போம்

2004ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் மின்சாரத்துறை கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு புதிய கருத்திட்டங்களை மேற்கொண்டன. இந்த திட்டங்கள் அனைத்துக்கும் ஜே .வி.பி.கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

ஜே.வி.பி. 1987 மற்றும் 1988ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொண்ட வன்முறைகளினால் அரச சொத்துக்கள் பல அழிக்கப்பட்டன. சேதமடைந்தன. இவற்றில் மின்பிறப்பாக்கிகளை பிரதானமாக குறிப்பிட வேண்டும். மின்பிறப்பாக்கிகளை வெடிக்கச் செய்து முழு நாட்டையும் இருளுக்குள் தள்ளினார்கள்.

மின்சாரத்துறை கட்டமைப்பைப் புதுப்பிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி 2004ஆம் ஆண்டு வந்த கருத்திட்டத்தை ஜே.வி.பி.கடுமையாக எதிர்த்தது. ஜே.வி.பி.யின் எதிர்ப்பினால் இலங்கையின் மின்சாரத்துறை கட்டமைப்பு பாரிய பின்னடைவை எதிர்கொண்டது என்றார்.

# 19 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

பகுதியில் உள்ள வர்த்தகர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் முதலானவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த 19 நபர்கள் மீது மல்லாவி பொலிஸாரால் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு மாங்குளம் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்காளிகள் சார்பாக மல்லாவி பொலிஸாரும், எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன் அவர்களும் மேலும் மூன்று சட்டத்தரணிகளும் முன்னிலையாகி இருந்தனர்.

குறித்த வழக்கில் “இது ஓர் அமைதியான பேரணி, பொத்துதலில் இருந்து பொலிகண்டி வரையான குறித்த போராட்டம் தமிழ் தேசிய இனத்தினுடைய அரசியல் உரிமைகளை வெளிப்படுத்தி நடாத்தப்பட்ட மற்றும் அமைதி வழியில் நடைபெற்ற பேரணி .என்று எதிராளிகள் சார்பில் விண்ணப்பத்தினை மன்றுக்கு சட்டத்தரணிகள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, போராட்டங்களை ஒருங்கிணைக்க , நடத்த அரசியல் அமைப்பு உறுப்புரை 14இன் அடிப்படையில் உரிமை காணப்படுகின்றது என்பதனையும் கௌரவ நீதிமன்றிற்கு எதிராளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குழாம் தெரிவித்திருந்தனர் இந்நிலையில் குறித்த வழக்கானது எதிர்வரும் 29.10.2025 அன்றுக்கு தவணை இடப்பட்டுள்ளது.



# மண்ணுக்குள் சிக்கிய அறுவர் பத்திரமாய் மீட்பு



சம்பவத்தை கண்டவர், அபாய குரல் எழுப்பியுள்ளார். அதைக் கேட்டு, ஓடோடி வந்தவர்கள், அவர்களை காப்பாற்றுவதற்கான முயற்சி செய்தனர். இந்நிலையில், சம்பவத்தைக் கேள்வியுற்ற மஸ்கெலியா பிரதேச சபை தலைவர், சபையின் உப- தலைவர் மற்றும் உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் பணியாளர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து அறுவரையும் காப்பாற்றினர்.

காப்பாற்றப்பட்ட யதுர்ஷன் (வயது 28), யோகேஸ்வரன் (வயது 45), ராஜேஸ்வரன் (வயது 38), விஜயலிங்கம் (வயது45), விஜயகுமார் (வயது 43) மற்றும் ஆறுமுகம் (வயது 45) ஆகிய அறுவரும், சிறு சிறு காயங்களுடன் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# “23,000 இலிருந்து 12,000 ஆகியிருக்கும்”

மேலும் அவர்பேசுகையில்,

மின்சாரத்துறை தொடர்பில் கடந்த காலங்களில் கொண்டு வந்த சட்டங்களுக்கு ஜே .வி.பி. எதிர்ப்பு தெரிவித்தது என்று கூறுவதனை ஏற்க முடியாது. 2002ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மின்சாரத்துறை தொடர்பான சட்டமூலங்களை எதிர்த்ததால் தான் மின்சார சபையின் தனியுரிமை பாதுகாக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டு அப்போதைய மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபையை 12 நிறுவனங்களாகக் கூறுபடுத்தும் வகையில், சட்டமூலத்தை கொண்டு வந்தார் .இதற்கு நாங்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். இருப்பினும், அச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த மின்சார சட்டத்தைச் செயற்படுத்தினால் இலங்கை மின்சார சபையின் தனியுரிமை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பல்வேறு பகுதியாகக் கூறுபடுத்தப்படும். இதனைத் தடுக்கும் வகையில் தான் புதிய திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார்.

# பிறப்பு வீழ்ச்சியால் 1ஆம் தரம் சரிந்தது

பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (05) அன்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு, கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன அளித்த பதிலிலேயே மேற்கண்ட விடயம் அம்பலமாகியுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க பாடசாலைகளில் 1 ஆம் வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை 360,000 ஆக இருந்தது, தற்போது அந்த எண்ணிக்கை 298,000 ஆகக் குறைந்துள்ளது, இது ஓர் ஆபத்தான குறைவு என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த 05 ஆண்டுகளுக்கான கணிப்பின்படி, 2030ஆம் ஆண்டுக்குள் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 இல் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 196,209ஆக இருக்கலாம், மேலும், இது முக்கியமாகப் பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவால் ஏற்படுகிறது என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன பதிலளித்துள்ளார்.

கடந்த 05 ஆண்டுகளில் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 இல் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில், கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன தெளிவுப்படுத்துகையில்,

2023 இல் 298,959 ஆகவும்,
2022 இல் 303,868 ஆகவும்,
2021 இல் 315,363 ஆகவும்
2020 இல் 330,571 ஆகவும்

அடுத்த 5 ஆண்டுகளில் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01இல் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கான கணிப்பின்படி,

2030 இல் 196,209 ஆகவும்,
2029 இல் 218,347 ஆகவும்,
2028 இல் 244,545 ஆகவும்,
2027 இல் 257,443 ஆகவும்,
2026 இல் 265,738 ஆகவும் சேர்க்கப்படுவார்கள்.

புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 360,000 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இன்று 298,000 ஆகக் குறைந்துள்ளது. ஆபத்தான குறைவு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்வதற்கான பயணத்தை எவ்வாறு தொடங்குவது?

இதற்கு கல்வி மற்றும் உயர்கல்வி துணை அமைச்சர் டாக்டர் மதுரா செனவிரத்ன பதிலளிக்கையில், சுமார் 5 ஆண்டுகளாக நாங்கள் முன்னறிவிப்பைச் செய்தபோது, நாங்கள் கணக்கில் எடுத்துக் கொண்ட விஷயங்களில் ஒன்று பிறப்பு சதவீதத்தில் சரிவு உள்ளது. அனைத்து குழந்தைகளும் 13 ஆண்டுகள் பாடசாலை கல்வியை முடிக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்றார்.

# “சவூதியின் சுனாமி வீடுகள் உயர்நீதிமன்றில் உள்ளது”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி எம். பி. காதர் மஸ்தான் பிரதமரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் பிரதமர் கூறுகையில்,

2004 டிசெம்பர் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது, வீடுகளை இழந்த அம்பாறை மாவட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக சவூதி அரேபிய அரசாங்கத்தின் சல்மான் மன்னரின் மனிதாபிமான உதவியில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 500 வீடுகளுடன் வீட்டுத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

அம்பாறை தீகவாபி ரஜ மஹா விகாரைக்கு அருகாமையில் இந்த வீட்டுத் திட்டம் அமைந்துள்ளதால் எல்லாவல மேதானந்த தேரர் உள்ளிட்ட தரப்பினர் அது தொடர்பில் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

அப்பகுதியில் முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவதானது பௌத்த மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என தெரிவித்து, 2008, மார்ச்,31ஆம் திகதி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில், பயனாளிகளுக்கு வீடுகளை பகிர்ந்தளிப்பதை நிறுத்த நேர்ந்தது.

அந்த அடிப்படை உரிமை மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம், 2009ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி தீர்ப்பு வழங்கியது. அதில் அரசாங்கத்தின் காணி மக்களுக்கு வழங்கும்போது, அது சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாத்திரமே வழங்க முடியும் என்றும் சட்டத்துக்கு அப்பால் எதையும் செய்ய முடியாது என்றும் தீர்ப்பளித்துள்ளது

அந்த வகையில், அரசாங்கத்தினால் தேசிய இன விகிதாசார அடிப்படையில் இந்த பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உயர் நீதிமன்ற தீர்ப்பினால் இதுவரை காலமும் அந்த 500 வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அது தொடர்பில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, அம்பாறை மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் இன விகிதாசாரப்படி, இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படுவது பொருத்தமானது என அங்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அடிப்படையில் அந்த மாவட்டத்தின் இன விகிதாசார அடிப்படையில் அந்த 500 வீடுகளையும் பகிர்ந்தளிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கினால் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

அந்த வகையில் அந்த மாவட்டத்தின் 38. 9 வீத சிங்கள மக்களுக்காக 95 வீடுகளும் 43. 4 வீத முஸ்லிம் மக்களுக்காக 270 வீடுகளும் 17.4 வீத தமிழ் மக்களுக்காக 87 வீடுகளும் ஏனைய இன பிரிவினருக்கு ஒரு வீடும் என வழங்க முடியும் என உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இதற்கு முன்னரும் இந்த விடயம் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இந்த எல்லா சந்தர்ப்பங்களிலுமே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமையவே செயற்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சட்டமா அதிபரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கலந்துரையாடலின் போது மேற்படி குடிசன மதிப்பீட்டுத் தகவல்களுக்கு இணங்க இன விகிதாசார அடிப்படையில் அந்த வீடுகளை வழங்குவது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பிரதி வெளி விவகார அமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையில் அது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரண்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது என அதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த வீடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

20 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இதுவரை அந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில், அந்த வீடுகள் பாவனைக்குப் பொருத்தமில்லாத நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளைத் திருத்துவதற்கு அம்பாறை மாவட்டச் செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜனாதிபதியின் செயலாளருக்கு அது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பி யுள்ளதுடன் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் சங்கம் மற்றும் சிவில் அமைப்புகளும் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க சுனாமியால் பாதிக்கப்பட்ட 308 குடும்பங்களுக்கு அந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்டச் செயலாளருக்குச் சம்பந்தப்பட்ட பயனாளிகளைத் தெரிவு செய்ய முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்காத வகையில் அந்த வீடுகளைப் பகிர்ந்து அளிப்பதற்கு ஒரு முறைமையைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாராளுமன்றத்தில் குழு ஒன்றை அமைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க முடியும். அதேவேளை சவூதி அரசாங்கமானது மேற்படி வீடுகளின் நிலைமை தொடர்பில் அமைச்சரவையுடன் அடிக்கடி வினவி வருகிறது என்றார்.

# “மோசடி உறுதியானால் விசாரணை நடக்கும்”

சமிந்த விஜேசிறி எம்.பி. தனது கேள்வியின்போது,

கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி, சீனி மோசடி மற்றும் தேங்காய் எண்ணெய் மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தபோதும் இதுவரை அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேநேரம், அரசாங்கம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுபோன்று, இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் உண்மையாக விசாரணை மேற்கொள்ளுமா?

குறிப்பாக, கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடிக்குச் சமமாக இந்த அரசாங்கத்தில் உப்பு மோசடி இடம்பெற்றுள்ளது. அதேபோன்று சீனி மோசடிக்குச் சமமாகக் கொள்கலன் விடுவித்த மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே இந்த மோசடிகள் தொடர்பிலும் அரசாங்கம் முறையான விசாரணை மேற்கொள்ளுமா? என கேட்டார்

இதற்கு பிரதமர் பதிலளிக்கையிலேயே எமது அரசாங்கம் ஊழல் மோசடிகள் தொடர்பில் உண்மையாகவே விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. அவ்வாறு இல்லாமல் இதன்மூலம் அரசாங்கத்துக்கு கௌரவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக விசாரணைகள் மேற்கொள்வதில்லை என்றார்.

# “வழக்குகளின் தரவுகள் கிடையாது”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.முஜிபுர் ரஹ்மான், மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை? அவற்றில் இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை?, அவ்வழக்குகள் யாவை/ வழக்குகளில் சட்டத்துறை தலைமையதிபதியினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பது தொடர்பில் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்வித தரவுகளும் கிடையாது. அதனால் முன்வைக்கப்பட்ட இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது அரசியல்வாதிகள், அரச அலுவலர்கள் என்று வகைப்படுத்தப்படுவதில்லை. அது தவறானது. பொதுவான நிரல்படுத்தலே குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன என்றார்.

# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல்

எதிர்வரும் 18 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட அவர், கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க, முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். ஆணைக்குழுவின் கூற்றுப்படி, செவனகலவில் உள்ள கிரிப்பன்வெவ நீர்த்தேக்கத்திற்கு அருகில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக பண்ணை கட்டிடம் கட்டியதாக சஷீந்திர ராஜபக்ஷ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மே 09, 2022 அன்று ‘அரகலய’ பொதுப் போராட்டத்தின் போது இந்தக் கட்டிடம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக் காணி இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமானது என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இருந்தபோதும், கட்டிடத்தின் புனரமைப்புக்கான ஒப்புதலைப் பெறுவதற்காக, தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ராஜபக்ஷ அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் ஊழல், சதித்திட்டம் மற்றும் அரசு சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியதாக ஆணைக்குழு கூறுகிறது.

1999ஆம் ஆண்டு சட்டம் இலக்கம் 28இன்படி, திருத்தப்பட்ட 1982ஆம் ஆண்டு சட்டம் இல 12 இன் பிரிவு 5(1) இன் கீழ், அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான குற்றங்களை நிவர்த்தி செய்யும் குற்றச்சாட்டின் பேரில் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# விழிப்புணர்வு நடைப்பயணம்

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் சங்க சம்மேளனத்தின் 19வது தேசிய கவுன்சில் தேர்தல், தேசிய இளைஞர் மாநாடு மற்றும் இளைஞர்களின் பொறுப்புகள் மற்றும் சமூக நோக்கம் குறித்த விழிப்புணர்வு நடைப்பயணம் புதன்கிழமை (06) காலை நுவரெலியா நகரில் நடைபெற்றது.


இந்த நடைப்பயணம் நுவரெலியா வரலாற்றுத் தபால் நிலையத்திற்கு அருகில் ஆரம்பமாகி, நுவரெலியா நகர வீதிகளில் சுற்றுப்பயணம் செய்து, நுவரெலியா நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தை அடைந்தது.

இந்த அணிவகுப்பில் கிட்டத்தட்ட ஆயிரம் இளைஞர்கள் கலந்து கொண்டனர், மேலும், இளைஞர்களை அவர்களின் சமூகப் பொறுப்பு மற்றும் பணி குறித்து ஊக்குவிக்கும் செய்திகள் அடங்கிய பதாகைகள் மற்றும் பதாகைகளையும், இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடிகளையும் ஏந்தி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

பல்லின மக்கள் வாழும் மாவட்டமான நுவரெலியா மாவட்டத்தின் அனைத்து மதங்களையும் இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் இந்த அணிவகுப்பில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.







# அமைதி வழி ஆர்ப்பாட்டம்

வி.ரி.சகாதேவராஜா

நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாட்கள் செயல்முனையின் 3ஆவது வருடம் நிறைவையொட்டி கல்முனை மாநகரில் புதன்கிழமை (6) காலை அமைதி வழி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீள பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மக்கள் பதாதைகளை ஏந்தி அமைதியான முறையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாட்கள் செயல்முனையின் 3ஆவது வருடம் குறித்து வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் ஊடக வெளியீடு ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.



“தமிழ், முஸ்லிம் தலைமைகள்

# “ஒரே மேசையில் அமர்ந்தால் முடிவுறும்”

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உள்ளக முரண்பாடுகளை ஒரே மேசையில் பேச்சு நடத்தித் தீர்க்க முடியுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா கொண்டு வந்த ஓட்டமாவடி எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான பிரேரணையில் உரையாற்றியபோதே ரிஷாட் பதியுதீன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விவாதத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது,

“சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துத் தீர்வுகாண முடியாது. எந்த அரசாங்கமானாலும் எமது சமூகங்களின் பிரச்சினைகளைத் தூண்டிவிட முயற்சிக்குமே தவிர, தீர்த்து வைக்க முயற்சிக்காது. கடந்தகால அனுபவங்களூடாக நாங்கள் புரிந்து வைத்துள்ள உண்மையே இது. ஓட்டமாவடி பிரதேச சபையை எமது கட்சியே வென்றிருந்தது. எனினும், எங்களை ஆட்சியமைக்க விடாமல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்துள்ளன.




இவ்விடயத்தில் ஏற்பட்ட புரிந்துணர்வுபோன்று ஏனைய காணிப்பிரச்சினை மற்றும் கல்விப் பிரச்சினைகளில் ஏன் இவர்களால் ஒன்றுபட முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்,முஸ்லிம் சமூகங்களின் அக முரண்பாடுகளைப் பேசித்தீர்க்க முடியும்.கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தையும் இழுத்தடிக்க வேண்டியதில்லை. சமூகத் தலைமைகள் இணைந்தால் இதையும் இலகுவாகத் தீர்க்கலாம்.

தனிநாடு,சமஷ்டி கோரிப் போராடிய தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் உள்ளக விடயங்களைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமுமில்லை. பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட சிறுபான்மை சமூகங்களின் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை.

எனவே, நமது உள்ளக பிரச்சினைகளை நாமே பேசித்தீர்த்துக் கொள்வோம்.தமிழ்,முஸ்லிம் தலைமைகள் ஒரே மேசையில் அமர்ந்தால்,எல்லா உள்ளக முரண்பாடுகளுக்கும் முடிவு கிடைக்கும்” என தெரிவித்தார்.

# குழந்தையின் சடலம் மீட்பு



மாவனெல்ல பகுதியில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் இருந்து ஒரு பெண் குழந்தையின் சடலம் செவ்வாய்க்கிழமை (05) அன்று மீட்கப்பட்டதாக மாவனெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, டங்கொல்ல பகுதியில் ஒருவரின் இரகசிய தகவலைத் தொடர்ந்து இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மாவனெல்லையில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் ஜூலை 31 ஆம் திகதி குழந்தை பிறந்திருந்தாலும், அந்த நேரத்தில் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாகவும், எனவே, அவரது தந்தை மற்றும் பாட்டி அதை ஒரு வெள்ளைத் துணியில் சுற்றி மத சடங்குகளை செய்த பின்னர் வீட்டின் முற்றத்தில் புதைத்ததாகவும் கர்ப்பிணிப் பெண் தெரிவித்துள்ளார்.

மாவனெல்ல பதில் நீதவான் எரங்கிகா வீரசிங்க முன்னிலையில் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டது. பின்னர் உடலை மாவனெல்ல மருத்துவமனைக்கு அனுப்ப உத்தரவிட்டார். சந்தேக நபர் தற்போது கண்டி மருத்துவமனையின் சிகிச்சை பெற்று வருகிறார்.

# ஹெரோயினுடன் பெண் கைது

கனகராசா சரவணன்

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பகுதியில் செவ்வாய்க்கிழமை (05) இரவு வீடொன்றை முற்றுகையிட்ட பொலிஸார், ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 45 வயதுடையவர் எனவும் இவர் நீண்டகாலமாக போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் ஆலோசனைக்கு அமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சந்தேக நபரின் வீட்டைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபரான பெண்ணிடம் இருந்து 2 கிராம் 330 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருளுடன் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த வாழைச்சேனை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சிறுவன் சடலமாக மீட்பு

பொலன்னறுவை, வெலிகந்த, நாகஸ்தென்ன பகுதியில் உள்ள இசட்.டி. பிரதான கால்வாயில் விழுந்து எட்டு வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்த, நாகஸ்தென்ன பகுதியைச் சேர்ந்த எம்.பி. லஷ்மிக ஹேஷான் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



குறித்த சிறுவன் தனது தாயுடன் ஆடுகளை பார்க்கச் சென்றிருந்த நிலையில், மகன் திடீரென காணாமல் போனதையடுத்து, அவர் வீட்டிற்குச் சென்றிருக்கலாம் என சந்தேகித்து தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

வீட்டிலும் தனது மகன் இல்லாததால் அயலவர்களுடன் இணைந்து இசட்.டி. கால்வாய் பகுதியில் மகனைத் தேடியுள்ளார்.

இரண்டு மணி நேர தேடுதலின் பின்னர் குறித்த கால்வாய்க்குள் இருந்து சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தினமும் 2 முட்டைகள் இட்ட கோழியின் சோகக் கதை

ரீ.எல்.ஜவ்பர்கான்

‘தங்க முட்டையிடும் வாத்து’ என்பது ஒரு பிரபலமான நீதிக்கதை ஆகும், இதில் ஒரு வாத்து தினமும் தங்க முட்டை இடும். அதை விற்று அந்த மனிதன் பணக்காரனாகிறான். அவனுக்குப் பேராசை வந்து, வாத்தின் வயிற்றில் எல்லா முட்டைகளையும் ஒரே நேரத்தில் எடுக்க முயற்சி செய்து, அதனால் வாத்தைக் கொன்றுவிடுகிறான். இறுதியில், அவனுக்குத் தங்க முட்டைகள் கிடைக்காமல் ஏமாற்றமே மிஞ்சியது.

அவ்வாறான சம்பவமொன்றே மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பாலமுனை கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாக உள்ள கோழி இறைச்சி விற்பனை செய்யும் கடையில் கோழி ஒன்று தினமும் இரண்டு முட்டைகளை இட்டுள்ளது.

குருநாகல் பிரதேசத்திலிருந்து அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட சிவப்பு நிறக் கோழியே 6 நாட்களும் 12 முட்டைகளைத் தொடர்ச்சியாக இட்டுள்ளது.



அவ்வாறான கோழியை, அந்த கடையின் உரிமையாளர் தாளங்குடவை சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துவிட்டார். அவர், கோழியை வாங்கிச் சென்று கழுத்தை அறுத்து குடல்களை வெளியே எடுத்தபோது, அதன் வயிற்றுக்குள்ளும் இரண்டு முட்டைகள் இருந்துள்ளன என கடையின் உரிமையாளரான முகமது அஸ்மான் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட நாட்களாக கோழி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் தான் ஒவ்வொரு நாளும் இரண்டு முட்டைகளை இடும் கோழியை முதன்முறையாக கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

# கசிப்புடன் மாமியார், மருமகள் கைது

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துல்கோட்டே பகுதியில், தனமல்வில பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (05) அன்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் மற்றும் அவரது மருமகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தனமல்வில, கித்துள் கோட்டை பகுதியைச் சேர்ந்த 53 மற்றும் 24 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது, கசிப்பு பாட்டில்கள் 46 மற்றும் கசிப்பு பாக்கெட்டுகள் 13 கைப்பற்றப்பட்டது. இந்தக் கைது நடவடிக்கையின் போது 24 வயதுடைய பெண் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடுமையாக இடையூறு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறதுடன் இருவரையும் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மதுபானங்களில் அதை கலந்த வியாபாரி

ரஞ்சித் ராஜபக்ஷ

மதுபானம் வழங்கி பணம் மற்றும் நகைகளை அபகரித்த போதைப்பொருள் வியாபாரி ஒருவர் நாவலப்பிட்டி பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (05) அன்று கைது செய்யப்பட்டு நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர் பிலிமத்தலாவை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய அஜித் கீர்த்தி லால் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மதுபான கடைகளுக்கு சென்று, அங்கு வருபவர்களுடன் நட்பு கொண்டு, சந்தேக நபரின் செலவில் அவர்களுக்கு மதுபானங்களை வாங்கி அதில் போதைப்பொருள் மற்றும் மாத்திரைகள் கலந்து கொடுத்துள்ளார்.

அதைக் குடித்த நபர்கள் சுயநினைவை இழந்த பிறகு, அவர்கள் வசம் இருந்த பணம் மற்றும் தங்க நகைகளை அபகரித்துக்கொண்டு சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக நாவலப்பிட்டி மற்றும் கம்பளை பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணைகளில், சந்தேக நபர் பிலிமத்தலாவ பகுதியில் தங்கியிருந்து குளிர்சாதன பெட்டிகள் பழுதுபார்க்கும் போர்வையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை செய்து வந்ததாகத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் ஏற்றிக்கொண்டு முச்சக்கர வண்டியில் கினிகத்தேன பகுதிக்குச் செல்வதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 4 மில்லி கிராம் ஹெரோயினுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைத்த பணத்தில் முச்சக்கர வண்டியை வாங்கியதாக சந்தேக நபர் நாவலப்பிட்டி பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.



# ஜனாதிபதி நிதியத்துக்குள் புகுந்து விளையாடிய பெருச்சாளிகள்

வறுமை ஒழிப்பு, கல்வி அல்லது ஞானத்தின் வளர்ச்சி, மதங்களின் எழுச்சிக்கு பங்களிப்பு செய்தல், நாட்டுக்கு சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கல், ஜனாதிபதி மற்றும் ஆட்சிமன்றக்குழு குழுவின் கருத்துப்படி, பொதுமக்களின் நலனுக்கான பணிகளைச் செய்தல் ஆகிய குறிக்கோள்களை அடிப்படியாகக் கொண்டு, ஜனாதிபதி நிதியம் 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கச் சட்டத்தால் நிறுவப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் பதவியேற்பை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆரம்ப வைபவத்தின்போது பொதுநலவிரும்பிகளின் நிதிசார் பங்களிப்புடன் 237,120 ரூபாய் ஆரம்ப மூலதனத்தினால் ஜனாதிபதி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தி லொத்தர்சபை மற்றும் பொதுமக்கள் நன்கொடைகள் மூலமாக இந்த நிதியத்துக்கு நிதி திறக்கப்படுகின்றது.

பல்வேறு நோய்களுக்கான மருத்துவ உதவி,மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வறுமை ஒழிப்புத் திட்டம்,மஹாபொல புலமைப்பரிசில் திட்டம், க.பொ.த (உ/த) விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்,க.பொ.த (சா/த) விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு (உ/த) கற்பதற்காக புலமைப்பரிசில் வழங்குதல், மத சீர்திருத்தம் மற்றும் கட்டுமான பணிகளுக்காக மானியங்கள் வழங்குதல், ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் 'பெரஹெரா' மற்றும் பிற கலாச்சார நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்குதல், தனிநபர்களின் நலனுக்காக ஜனாதிபதி நிதியம் என்ற பெயரில் அரசு வங்கிகள் மற்றும் பொது அறங்காவலர் திணைக்களத்தில் பராமரிக்கப்படும் கணக்குகள். மற்றும் ஜனாதிபதி மற்றும் செயற்குழுவின் விருப்பப்படி வழங்கப்படும் நன்மைகள் ஆகியன இந்த நிதியத்தின் செயற்பாடுகளாகும்.

எனினும், கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உறவினர்களுக்காக இந்த நிதியத்தின் ஊடாக நிதியைப்பெற்றுள்ளமை அம்பலத்துக்கு வந்துள்ளது. தன்னுடைய மனைவிக்காகவும் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இது வெட்கமே இல்லாமல் பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், நோய்களுக்கான மருத்துவ உதவிக்கான நிதியுதவிக்கு விண்ணப்பித்த பலரும், உரிய நேரத்தில் நிதி கிடைக்கவில்லை என கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

பொதுப் போக்குவரத்துக்களில் படங்களைத் தாங்கியவாறு நிதியுதவி கோரும் பலரும், தாங்கள் ஜனாதிபதி நிதியத்துக்கு விண்ணப்பித்து இருப்பதாகவும், பல மாதங்கள் கடந்தும் நிதியுதவி கிடைக்கவில்லை என கவலைப்படுவதைப் பலரும் பார்த்திருப்பீர்கள் எனினும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகள் குழுவின் 72 க்கும் மேற்பட்ட குழந்தைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ரூ. 200 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள வெளிநாட்டு உதவித்தொகைகளை வழங்கியுள்ளமை அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் பணத்தை மட்டுமன்றி, பொதுமக்களுக்குக் கிடைக்கவேண்டிய நிதியத்திலும் அரசியல் பெருச்சாளிகள் புகுந்து விளையாடிவிட்டனர். அதனால்தான், அரசியலில் தொடர்ந்து குளிர்காய்வதற்குப் பலரும் முண்டியடித்துக் கொண்டுள்ளனர் என்பது புலனாகிறது. அந்தளவுக்கு சுகபோகங்களை அனுபவிக்கின்றனர், ஆகையால், எதிர்காலங்களில் இவ்வாறான முறைகேடுகள் இடம்பெறாதவகையில் சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும் என்பதே எமது அறிவுறுத்தலாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புத்தான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### காணியை விடுவித்து தரவும்



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர் விவசாய காணியை சூரிய மின் சக்திக்காக அபகரிக்கப்பட்ட நிலையில், அதனை விடுவிக்குமாறு அப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை துறைமுக அதிகார சபை இதைக் கையகப்படுத்தி இரு தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கியுள்ளனர். இவ்விவசாய காணியை நம்பியே அப் பகுதி மக்கள் இதில் விவசாயம் செய்து வந்தனர்.

தற்போது சூரிய மின் சக்தி உற்பத்திக்காக சுமார் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதிகளை வேலி அடைத்து தங்களுடைய திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் இதில் 800 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில், கடந்த ஜூலை 29ஆம் திகதி அன்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது மாவட்ட செயலகம் முன் கவனயீர்ப்பில் ஈடுபட்ட விவசாயிகளை பொலிஸார் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, தங்களுக்கு, நீதியான நியாயமான முறையில் அபகரிக்கப்பட்ட விவசாய காணியை விடுவித்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ஏ.எச். ஹஸ்பர்

# பெரிய தலைகள் தோற்றுப்போகும் நிலை

முருகானந்தன் தவம்

இலங்கையின் எம்.பிக்களின் சொத்து பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு கடந்த 30ஆம் திகதி முடிவடைந்த போதிலும், 175 எம்.பிக்களில் 80 பேர் இன்னும் தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவில்லை, அதன்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்காத எம்.பி.க்கள் மீது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது . இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டத்தின்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் எம்.பிக்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கைக் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் அதிகாரமும் ஆணையத்திற்கு உள்ளது.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன் வைத்திருக்கும் அனைத்து சொத்துக்களின் விவரங்களையும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கிடையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முந்தைய பாராளுமன்றத்தில் பணியாற்றிய பாராளுமன்ற ஊழியர்களில் பெரும்பாலோர் தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சம்பந்தப்பட்ட தலைவர்களிடம் சமர்ப்பிக்கவில்லை.

இவ்வாறான நிலையில்தான் இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழுத்தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான சிறீதரன் சட்டத்துக்கு முரணாக சொத்துக்கள் வைத்திருப்பதாக சிவில் ஆர்வலர் சஞ்சய் மஹாவத்த என்பவர் குற்றப் புலனாய்வுத்துறையில் முறைப்பாடு செய்துள்ளார். சிறீதரன் தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் பெயர்களில் சொத்துக்களைப் பராமரித்து வருவதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் முறைப்பாட்டாளர் கோரியுள்ளார். இந்த முறைப்பாட்டாளர் ரணில் விக்ரமசிங்கவின் தீவிர ஆதரவாளர். அவர் முன்னாள் சிங்கள அமைச்சர்கள், எம்.பிக்களின் சொத்துக்கள் தொடர்பில் இவ்வாறு பல முறைப்பாடுகளை செய்துள்ளவர்.

ஆனால் ''எனக்கு முகம் தெரியாத சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நிதிக்கேற்ற புலனாய்வு பிரிவில் சொத்துக் குவிப்பு சம்பந்தமாக என் மீது முறைப்பாடு செய்திருக்கிறார். இந்த விடயத்தை நல்லதொரு விடயமாகவே நான் பார்க்கிறேன்.என்னுடைய பெயரிலேயோ அல்லது என்னுடைய குடும்பத்தினரின் பெயரிலேயோ இலங்கைக்குள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ சொத்துக்கள் இருந்தால் அது தொடர்பில் நிதிக்குற்றவியல் விசாரணை பிரிவினர் கண்டுபிடித்து, அதனை மக்களுக்கு வெளிப்படுத்துவது அவர்களது தார்மீக கடமை என தெரிவித்திருக்கும் சிறீதரன், என் மீதான இந்த அவதூறான செயற்பாட்டுக்குப் பின்னால் தமிழரசு கட்சியின் தலைமை பதவி தொடர்பில் எனக்கெதிராக நீதிமன்றத்தினூடாக இடைக்கால தடை உத்தரவு பெற்றிருக்கும் தரப்பினரே இருப்பதாகவும் , தமிழரசு கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டபோது என்னோடு சேர்ந்திருந்து எனது கைகளைத் தூக்கி, என்னோடு இணைந்து செயற்படுவதாகக் கூறியவர்களே ,கட்சியில் இணைந்து 6 மாதங்களே ஆகாதவர்களை வைத்துக்கொண்டு, பின்னணியில் இருந்து கொண்டு எனக்கெதிராக வழக்கு தாக்கல் செய்து இடைக்காலத் தடையைப் பெற்றிருந்தார்கள். அந்த அடிப்படையில், இந்த சம்பவங்கள் அனைத்துக்கும் பின்னால் கட்சியின் தலைமைப்பதவி தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்தவர்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, நிதி குற்றப் புலனாய்வு பிரிவை நம்பி என்மீது சொத்துக் குவிப்பு தொடர்பில் முறைப்பாடு செய்திருக்கும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சஞ்சே மகாவத்த என்ற நபருடைய முறைப்பாட்டை ஏற்று உரிய விசாரணைகளை முன்னெடுத்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அவசியம் .

என்னிடம் அவ்வாறான சொத்துக்கள் இருந்தால் அதனை உறுதிப்படுத்தவேண்டுமென்பதே என்னுடைய நிலைப்பாடு. வருடாந்தம் என்னுடைய சொத்து விபரங்களைப் பாராளுமன்ற சபாநாயகரிடம் கையளிப்பதோடு, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற பிரிவுக்கும் கையளித்து வருகிறேன். இணையத்தளங்களில் அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் என்னுடைய சொத்து விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. என்னுடைய சொத்து விபரங்கள் என்பது வெளிப்படையானது. இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவனாக என்னுடைய சொத்து விபரங்களை வெளிப்படையாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் இணையத்தளத்தினூடாக வெளியிட்டு வருகிறேன். அதனை எவரும் பார்க்கமுடியும். ஆகவே, என் மீது சுமத்தப்பட்டிருக்கும் முறைப்பாட்டை ஏற்று விரைவாக விசாரணைகளை ஆரம்பித்து உண்மையைக் கண்டறிந்து மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நிதிக்குற்ற புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கையை நான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன்' எனவும் தெரிவித்துள்ளார்.

சிறீதரன் மீதான இந்த சட்ட விரோத சொத்துக்குவிப்பு முறைப்பாட்டின் பின்னணியில், அவரது தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைகள் சம்பந்தப்பட்டிருப்பது உள் வீட்டுத் தகவல்களாகக் கசிந்துள்ளது. இதற்கு சிறீதரன் எம்.பியை தமிழரசுக் கட்சியிலிருந்து மட்டுமல்லாது எம்.பி. பதவியிலிருந்தும் அகற்றுவதே இந்த தலைகளின் திட்டமாகவுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தலைமைக்கு சிறீதரன் கட்டுப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்துத் தோற்றவர்கள், சிறீதரன் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார் என்ற போலி குற்றச்சாட்டை சுமத்தி தோற்றவர்கள் தற்போது சிங்களத்தரப்போடு சேர்ந்து சிறீதரன் சட்டவிரோதமாக சொத்து குவித்துள்ளார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர். இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில், கட்சி நடவடிக்கையாக சிறீதரன் மீது கட்சித் தலைமைக்கு கட்டுப்படாமை குற்றச்சாட்டுடன் சட்டவிரோத சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டையும் முன் வைத்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியிலிருந்து நீக்குவதே இவர்களின் திட்டம்.

தமிழரசுக் கட்சியின் இந்த பெரிய தலைகளுக்கு சிறீதரன் மீது ஏன் இந்த வன்மம் என் று பார்த்தால் அது சிறீதரன் மீதான வன்மம் அல்ல அவரின் எம்.பி. பதவி மீதான மோகமே காரணம் என உள்வீட்டுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழரசின் தலைவர் பதவியிலும் பாராளுமன்ற எம்.பி. பதவியிலும் சிறீதரனிடம் தோற்றவர்களினால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. அத்துடன் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற அதீத நம்பிக்கையில் ''மக்களினால் தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே பாராளுமன்றம் செல்வோம் .தேசியப்பட்டியல் மூலம் ஒருபோதும் பாராளுமன்றம் செல்ல மாட்டோம் '' என தெரியாத்தனமாக சூளுரைத்துவிட்ட நிலையில், பாராளுமன்றத் தேர்தலில் தோற்று இன்று தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்லமுடியாத நிலை.

அதனால்தான் சிறீதரனை ஏதோவொரு வழியில் கட்சியிலிருந்து வெளியேற்றினால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகும் .அதன் மூலம் பாராளுமன்றத் தேர்தலில் சிறீதரனுக்கு அடுத்ததாக வாக்குகள் பெற்றவர் என்ற அடிப்படையில், பாராளுமன்றம் செல்லமுடியும் என்ற திட்டத்தில் சிறீதரனின் எம்.பி. பதவி மீது இலக்கு வைத்தே இவ்வாறு தொடர்ந்தும் சிறீதரனை வீழ்த்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்கின்றது அந்த உள்வீட்டுத்தகவல்.

சிறீதரனின் எம்.பி.பதவிக்கு எவ்வேளையும் ஆபத்து ஏற்படலாம் என்பதனை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அளித்துள்ள விளக்கமொன்றின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.அந்த விளக்கத்தில் சுமந்திரன் பின்வருமாறு கூறுகின்றார்.

கட்சியின் ஒழுக்கக் கோவையுடன் இணைந்து செயற்பட முடியாதவர்கள் தாராளமாக வெளியே போகலாம்.கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சிக்கு மாறாக, செயற்படுவதனை எந்த மானமுள்ள அரசியல் கட்சியும் அனுமதிக்காது. கட்சிக்குள் இருந்து கொண்டு பலவிதமான கேள்விகளை எழுப்பலாம் கருத்துரைக்கலாம். கட்சி செய்வது தவறு என்று கூறலாம். இவை செவிமடுக்கப்படும். ஆனால், இறுதியில் ஒரு தீர்மானத்தைக் கட்சி எடுத்தால் அந்த தீர்மானத்திற்கு ஆதரவில்லாமல் பேசியவர்கூட கட்சியின் தீர்மானத்தோடு சேர்ந்து நிற்க வேண்டும்.

வெளியே போய் நின்று கொண்டு நான் இதனை எதிர்த்தேன். எனக்கும் இதற்கும் தொடர்பில்லை என சொல்வது முறையற்ற செயற்பாடு. கட்சி கட்டுப்பாட்டோடு இயங்காது விட்டால், அது ஒரு கட்சி அல்ல. கட்சி ஒரு கொள்கையை அறிவித்தால் இல்லை அதனை நான் ஏற்கமாட்டேன் என்றால், அவர் வேறு கட்சிக்குப்போக வேண்டும். இந்தக் கட்சியில் இருக்க முடியாது. இந்த விடயத்தில் எமது மத்தியக் குழுவும் செயற்குழுவும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கட்சியின் தீர்மானம். கொள்கைக்கு மாறாக, செயற்படுபவர்களுக்கு எதிராக கட்சி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். அவர்கள் தவறு செய்தது உறுதிப்படுத்தப்பட்டால் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். அவர்களுக்கு சட்ட ரீதியாகக்கூட நிவாரணம் எதுவும் கிடைக்காது என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

எனவே, கட்சி ஒழுக்கக் கட்டுப்பாடு காரணமாக நடவடிக்கை எடுக்கும்போது, எந்த நீதிமன்றமும் அதில் தலையிடாது. ஆகவே, எதையும் செய்து விட்டு கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்தால் அதற்கு நான் இணங்க மாட்டேன். இது என்னுடைய சுதந்திரம், நான் இன்னொரு வேட்பாளரை ஆதரிப்பேன் என்று சொல்லி நடப்பவர் கள் விரைவில் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

ஆனால், வழக்கம் போலவே சிறீதரனின் கட்சியின் தலைமைக்குக் கட்டுப்படாமை, மதுபானசாலை அனுமதிப்பத்திரம் போன்ற குற்றச்சாட்டுக்களில் சிறீதரனிடம் தோற்றதுபோலவே இந்த சட்டவிரோத சொத்து குவிப்பு குற்றச்சாட்டிலும் இந்த பெரிய தலைகள் தோற்றுப்போகும் நிலையே உள்ளது.

அறுகம்பையில் நடப்பது என்ன?

# அலையும் அலைகளும் அலையடிக்கும் சர்ச்சைகளும்





தி.டிலக்சன்,
அரசறிவியல்துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு கடற்கரை கிராமமான அறுகம்பை அமைதியான சூழலுக்கும், மனதைக் கொள்ளைகொள்ளும் இயற்கை அழகுக்கும் பெயர் பெற்றது. குறிப்பாக உலகத் தரம் வாய்ந்த அதன் அலைகள் நீரலைச் சறுக்கு வீரர்களின் சொர்க்கமாக இத்தீவை உலக வரைபடத்தில் நிலை நிறுத்தியுள்ளது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இந்த அமைதிச் சொர்க்கம் வெளிப்படையாகத் தெரியாத பல உள்நாட்டு வெளிநாட்டு சர்ச்சைகளின் மையமாக மாறியுள்ளது. கடல் அலைகளுடன் ஒரு புதிய அலை சர்ச்சைகளின் அலை இங்கு ஆர்ப்பரிக்கத் தொடங்கியுள்ளது.

அறுகம்பே நீண்ட காலமாக சுற்றுலாப் பயணிகளின் விருப்பமான இடமாக இருந்து வருகிறது. அதன் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாத்துறையை நம்பியே உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்குத் தங்கி கடற்கரை வாழ்க்கையை அனுபவித்து இப்பகுதியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். ஆனால், அண்மைக் காலமாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் கணிசமான அளவில் இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுவே பல சர்ச்சைகளின் தொடக்கமாக அமைந்தது.

அறுகம்பேயில் இஸ்ரேலியர்கள் பல தங்குமிடங்களையும், உணவகங்களையும், மற்ற வர்த்தக நிறுவனங்களையும் நடத்தி வருகின்றனர். அவர்கள் சுற்றுலாப் பயணிகளாக மட்டும் இல்லாமல் இப்பகுதியின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் மாறியுள்ளனர். இது, உள்ளூர் மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

## யூதர்களின் புகலிடமா மாறுகின்றதா அறுகம்பை?

அறுகம்பை குறித்து நிலவும் பெரிய கேள்வி இது இஸ்ரேலியர்களுக்காக ஒரு புதிய புகலிடமாக மாறி வருகிறதா என்பதே. இதற்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்று இங்கு இயங்கி வரும் ஒரு 'யூத மத்திய நிலையம்' ஆகும். இந்த நிலையம் யூத சுற்றுலாப் பயணிகளுக்கு ஆன்மிக மற்றும் சமூக சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு புறம் யூத சமூகத்தினருக்கு உதவினாலும் மறுபுறம் அறுகம்பையில் ஒரு நிரந்தர யூத சமூகம் உருவாகி வருவதற்கான அறிகுறியாக இது பார்க்கப்படுகிறது. இந்த நிலையம் அறுகம்பையின் அமைதியான கலாச்சார அமைப்பில் ஒரு அந்நிய உறுப்பாகக் கருதப்படுவதால் உள்ளூர் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## நில அபகரிப்பு மற்றும் பொருளாதார ஆதிக்கமா?

இஸ்ரேலியர்களின் வருகை வெறும் சுற்றுலா நடவடிக்கையாக மட்டும் இல்லாமல் பொருளாதார ஆதிக்கமாகவும் மாறியுள்ளது. அதிக விலை கொடுத்து நிலங்களை வாங்குவது குறிப்பாக, கடற்கரைக்கு அருகில் உள்ள நிலங்களை வாங்குவது போன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இது உள்ளூர் நிலங்களின் விலையை உயர்த்தி உள்ளூர் மக்கள் நிலத்தை வாங்குவதையோ அல்லது சொந்த வணிகத்தை நடத்துவதையோ கடினமாக்குகிறது. சில சமயங்களில் சட்டவிரோதமாக நிலங்களை ஆக்கிரமிக்கும் முயற்சிகளும் நடப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது அறுகம்பேயின் பாரம்பரிய சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பை சீர்குலைப்பதாக உள்ளது. மீனவர்கள் மற்றும் சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரம் இதனால் நேரடியாகப் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

## பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுமா?

அறுகம்பையில் இஸ்ரேலியர்களின் இருப்பு ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து சர்வதேச அளவில் இஸ்ரேலியர்கள் இலக்கு வைக்கப்படலாம் என்ற எச்சரிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் அறுகம்பேயில் உள்ள இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அண்மையில் இதுபோன்ற தாக்குதல் குறித்த உளவுத் தகவல்கள் கிடைத்ததையடுத்து, அறுகம்பே பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த நிலைமை இப்பகுதியின் சுற்றுலா சூழலை மேலும் சிக்கலாக்குகிறது. அமைதியான ஒரு சுற்றுலாத் தலத்திற்கு இது ஒரு புதிய பாதுகாப்புச் சவாலாக உருவெடுத்துள்ளது.

## அரசியல் மற்றும் இராஜதந்திரத்தில் தாக்கம் ஏற்படுமா?

இந்த விவகாரங்கள் இலங்கையின் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சில அரசியல் தலைவர்கள் இந்த விவகாரம் குறித்து அரசாங்கத்திடம் கேள்விகளை எழுப்பியுள்ளதோடு, இது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாகவும் பார்க்கப்படுகிறது. அதேபோல் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டைப் பாரம்பரியமாக எடுத்து வரும் இலங்கையில் இஸ்ரேலியர்களின் இத்தகைய ஆதிக்கம் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சமும் நிலவுகிறது. இவர்கள் அறுகம்பேயில் கொஞ்சம் கொஞ்சமாகக் குடியேறி இலங்கையை அவர்கள் தங்களுடைய காலனித்துவத்தின் கீழ் கொண்டு வர வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

## அறுகம்பையின் எதிர்காலத்தை பார்கும் போது...

அறுகம்பே தற்போது ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. ஒருபுறம் சுற்றுலா வளர்ச்சி மூலம் பொருளாதார பலத்தை ஈட்ட வேண்டும் என்ற நோக்கம் உள்ளது. மறுபுறம் வெளிநாட்டவர்களின் ஆதிக்கம், நில அபகரிப்பு, கலாசார மாற்றங்கள், மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் போன்ற பிரச்சினைகள் தலைதூக்குகின்றன.

அறுகம்பேயின் எதிர்காலம் இலங்கை அரசாங்கம் இந்த பிரச்சினைகளை எவ்வாறு கையாள்கிறது என்பதைப் பொறுத்தது. சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அதே நேரத்தில் உள்ளூர் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது மிக முக்கியம். இல்லையென்றால் அறுகம்பே அதன் இயற்கையான அமைதியையும், கலாச்சார அடையாளத்தையும் இழந்து வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு புதிய பகுதியாக மாறிவிடும். அறுகம்பையில் எழும் இந்த சர்ச்சைகளின் அலைகள் ஒரு நாள் அதன் அமைதியான கரையையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையையும் முழுமையாக விழுங்கி விடும் அபாயம் உள்ளது.







# 'சித் ரூ-2025' கலை நிகழ்ச்சி



மாற்றுத்திறனாளிகளின் அழகியல் திறமைகளை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சித் ரூ-2025' கலை நிகழ்ச்சி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் செவ்வாய்க்கிழமை (05) அன்று நடைபெற்றது.

இலங்கை முழுவதும் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 'ஒன்றாக - கைவிடாத' என்ற தேசிய கொள்கைக்கு இணங்க, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து சமூகமயப்படுத்தல், வலுப்படுத்தல், புனர்வாழ்வு மற்றும் நாட்டின் பொருளாதார செயற்பாட்டில் பங்கேற்பவர்களாகவும் பெருமைமிக்க பிரஜைகளாகவும், வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்த சமூக சேவைகள் திணைக்களம் அதன் ஒரு மூலோபாயங்களில் ஒன்றாக 'சித் ரூ' கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது. 06 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முறை இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாற்றுத்திறனாளிகளின் புனர்வாழ்வு, வலுப்படுத்தல் மற்றும் பாதுகாப்புக்காக சமூக சேவைகள் திணைக்களத்திற்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 632 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

'சித் ரூ-2025' மாகாணப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர் வழிகாட்டல் மையங்கள், சிறுவர் பராமரிப்பு மையங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஜனாதிபதி பரிசுகளையும் விருதுகளையும் வழங்கினார்.

பிள்ளைகளுடன் சிநேகபூர்வமான உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களுடன் குழு புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார்.

மாணவியொருவரால் வரையப்பட்ட ஜனாதிபதியின் புகைப்படம் ஒன்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வழங்கி வைக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே, பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க, சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தர்ஷனீ கருணாரத்ன மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.













# Motorshow '25இல் Evolution Autoவின் EV புரட்சி














**2025 ஆகஸ்ட் 1: மின்சாரவாகனப் போக்குவரத்துத் துறையில் நாட்டின் முன்னணி நிறுவனமான Evolution Auto, இன்று BMICHஇல் நடைபெற்ற Motorshow 2025இல், இலங்கையின் மிக விரிவான மின்சார வாகன (EV) வரிசையை Evolution Auto அறிமுகப்படுத்தியதன் மூலம், நாட்டின் வாகனத் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லை நிறுவியுள்ளது.**

5 உலக வர்த்தக நாமங்களின் 7 புதிய மாதிரிகளை அறிமுகப்படுத்திய இந்த வெளியீடு, இரு சக்கர வாகனங்கள், முச்சக்கர வாகனங்கள், வணிக வேன்கள், Lifestyle Pickups மற்றும் Luxury பயணிகள் வாகனங்கள் எனப் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி, இலங்கையின் மின்சார வாகனப் புரட்சியில் Evolution Autoவை முன்னிறுத்தியுள்ளது.

நிறுவனத்தின் Luxury பயணிகள் EV அறிமுகம், AVATR, XPENG, IM Motors, Geelyஇன் Riddara மற்றும் KYC உள்ளிட்ட உலகளாவிய வர்த்தக நாமங்களின் வியக்கத்தக்க மாதிரிகளைக் காட்சிப்படுத்தியது. காட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு மாதிரித் தெரிவும், சிறந்த செயல்திறன், அறிவார்ந்த வடிவமைப்பு மற்றும் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தின் தனித்துவமான கலவையை பிரதிபலித்தது. இதன்மூலம், அனைத்து பிரிவினருக்கும், வெவ்வேறு வாழ்க்கை முறைகளுக்கும் அதிநவீன மின்சார வாகனப் போக்குவரத்துத் தீர்வுகளைக் கிடைக்கச் செய்வதே Evolution Auto வின் முக்கிய இலக்கு என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது

இந்த முன்னோடி வரிசையில், Changan, Huawei மற்றும் CATL இணைந்து உருவாக்கிய Luxury SUV ஆன AVATR-11, நேர்த்தியான வடிவமைப்பையும், ultra-premium அம்சங்களையும், தடையற்ற smart ஒருங்கிணைப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்போது 60க்கும் மேற்பட்ட உலகளாவிய சந்தைகளில் கிடைக்கும் XPENG G6, 190 kW திறன் கொண்ட இலங்கையின் மிக சக்திவாய்ந்த EV மோட்டாரைக் கொண்டுள்ளது. Volkswagen, Foxconn மற்றும் Alibaba உடனான XPENG இன் கூட்டு முயற்சியால், இது வெறும் 6.6 வினாடிகளில்0-100 கிமீ/மணி வேகத்தை எட்டுகிறது. மேலும், MG மற்றும் Chevrolet, GM உடனான கூட்டு முயற்சிகளுக்குப் பின்னணியில் உள்ள வாகனத் துறையின் ஜாம்பவானான SAIC Motorsஆல் உருவாக்கப்பட்ட IM Motors IM5 Intelligent Gran Coupe மற்றும் IM6 Intelligent Grand SUV ஆகியன, Crab Mode, Rainy Night Mode மற்றும் Dynamic Driver Interfaces போன்ற அறிவார்ந்த AI-உதவி அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

மேலும், Geely Holding Group இன் இலங்கையின் முதல் PLV (Performance Lifestyle Vehicle) ஆன Riddara RD6ம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, SUVஇன் வசதியையும், உண்மையான Off-Road Capabilityயையும் ஒருங்கிணைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. RD6 ஆனது 815 மிமீ நீர்-ஊடுருவல் ஆழம் மற்றும் 540° Camera System போன்ற சிறப்பு அம்சங்களுடன், உள்ளூர் சந்தையில் Pickups குறித்த எதிர்பார்ப்புகளை மறுவரையறை செய்கிறது. வர்த்தகப் பிரிவைப் பொறுத்தவரை, KYC இன் V5 மற்றும் V7 EV Vans சிறந்த Range, உயர்-செயல்திறன் கொண்ட CATL Battery Systems மற்றும் Fleet-Friendly Design உடன் 9 இருக்கை விருப்பங்களை வழங்குகின்றன. இவை நீண்ட கால, நிலையான வணிக அல்லது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானவையாக விளங்குகின்றன.

காட்சிப்படுத்தப்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் Evolution Autoவின் நிகரற்ற விற்பனைக்குப் பிந்தைய சேவை ஆதரவு வழங்கப்படும். இதில், 8 ஆண்டுகள் வரையிலான Battery Warranty, வாகனத்திற்கு 5 வருட Warranty, மற்றும் ஒரு விரிவான 5 ஆண்டு/100,000 கிமீ Maintenance Package ஆகியவை அடங்கும். இது, வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் நீண்ட கால உரிமையின் மீது Evolution Auto கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்பைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

தனது விரிவான EV வரிசை குறித்துக் கருத்துத் தெரிவித்த Evolution Auto குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) விரான்டி சொய்சா கூறுகையில், "இலங்கையின் நிலையான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட போக்குவரத்து எதிர்காலத்திற்கான பயணத்தில், இன்று ஒரு முக்கியத் தருணமாகும். உலகளவில் புகழ்பெற்ற ஐந்து வர்த்தக நாமங்களில் ஏழு புதிய மின்சாரவாகன மாதிரிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், தினசரிப் பயணிகள் மற்றும் வணிகச் செயற்பாட்டாளர்கள் முதல் Premium Lifestyle Users வரை - அனைத்துப் பிரிவினருக்கும் சேவையளிக்கும் வகையில், நாட்டின் மிகப் பெரிய மற்றும் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட EV வரிசையை வழங்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். புதிய வாகனங்களை அறிமுகப்படுத்துவதோடு, இது எதிர்பார்ப்புகளை மறு வரையறை செய்கிறது. EV பயன்பாட்டில் நம்பிக்கையை வளர்க்கிறது. அத்துடன், நாட்டில் போக்குவரத்துச் சேவைகளின் புதிய தர நிலைகளை அமைக்கவும் உதவுகிறது" என்றார்.

தங்கள் விரிவான EV வரிசையைப் பூர்த்தி செய்யும் வகையில், Evolution Auto நிறுவனம் தனது தேசிய ரீதியான இருப்பை வேகமாக விரிவுபடுத்துகிறது. இதன் ஒரு பகுதியாக, Duplication Road வீதியில் அதன் முதன்மை Premium Showroom விரைவில் திறக்கப்படவுள்ளது. அத்துடன், Havelock City Atrium இல் கூடுதல் காட்சி அனுபவங்களும், Peliyagodaவில் ஒரு பிரத்யேக KYC Showroomம் தற்போது அமையப் பெற்றுள்ளன. மேலும், பேலியகொடவில் திறக்கப்படவுள்ள Evolution Autoவின் புதியபல-வர்த்தக நாம EV Service Complex, அதன் அனைத்து வர்த்தக நாமங்களுக்கும் சிறப்பு பழுது கண்டறிதல், பராமரிப்பு மற்றும் After-sales Service சேவைகளை வழங்கும்.

"இலங்கையில் எங்கள் கவனம் இரு முனையானது: உலகளாவிய EV வர்த்தக நாமத் தெரிவுகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்துவதுடன், முதல் தொடர்பிலிருந்தே வாடிக்கையாளர் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு முழுமையான உரிமையாளர் அனுபவத்தை உருவாக்குவதுமே ஆகும். "எங்கள் வரிசையில் உள்ள ஒவ்வொரு மாதிரித் தெரிவும், Design, Performance மற்றும் Smart Technologyயை ஒருங்கிணைக்கும் அதன் தனித்துவமான திறனை அடிப்படையாகக் கொண்டே தெரிவு செய்யப்பட்டுள்ளது. Immersive Displays முதல் நீண்டகால After-sales Service வரை, எங்கள் ஒவ்வொரு முயற்சியும் Evolution Autoவின் வாக்குறுதியை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதி: நீங்கள் நம்பிச் சார்ந்திருக்கக்கூடிய Innovation, நம்பகமான Service, மற்றும் எதிர்காலத்திற்கு உண்மையிலேயே தயாரான Transportation," என்று Evolution Autoவின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி அஷான் விக்ரமசிங்க கருத்துத் தெரிவித்தார்.

தங்கள் வர்த்தக இருப்பை நாடு முழுவதும் மேலும் விரிவுபடுத்துவதற்காக, Evolution Auto குருநாகல், கண்டி மற்றும் மாத்தறையில் வலுவான கூட்டாண்மைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் நாடு தழுவிய அணுகலை உறுதிப்படுத்துவதுடன், மேலும் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

இது இலங்கை முழுவதும் நம்பகமான மின்சார வாகனப் போக்குவரத்திற்கான பிராண்டின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது. மின்சார வாகனங்களின் உரிமையை மேம்படுத்தவும், உரிமையாளர்களை ஊக்குவிக்கவும், Evolution Auto, Sterling Aftercare உடன் இணைந்துள்ளது. இதன் மூலம் அவர்களது முழு அளவிலான வாகனங்களுக்கும் நாடு முழுவதும் சேவைகளையும், After-sales Supportடையும் வழங்குகிறது.

# இலங்கை இராணுவத்துடன் இணைந்த சுவசெவன



கண்டியில் உள்ள முன்னணி தனியார் சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களி ல்ஒன்றான சுவசெவன மருத்துவமனை, இலங்கை இராணுவத்திற்கான 'சுவசெவன காப்புறுதித்திட்டத்தின்' கீழ் இராணுவவீரர்களுக்கு சலுகை அடிப்படையிலான சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக இலங்கை இராணுவத்துடன் கைகோர்த்துள்ளது. இது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் (MoU) கையெழுத்திட்டதன் மூலம், தேசத்தைப் பாதுகாப்பதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களை ஆதரிப்பதில் சுவசெவனவின் உறுதிப்பாட்டை இந்த கூட்டாண்மை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தி ல்இலங்கை இராணுவத்தின் சார்பாக பிரிகேடியர் பெனாண்டோ, மேஜர் தனுஷ்க குமார மற்றும் லெப்டினன்ட் கேர்ணல் பிரேமச்சந்திர ஆகியோர் கைச்சாத்திட்ட அதே நேரத்தில் சுவசெவன மருத்துவமனை வணிக மேம்பாட்டுத் தலைவர் ஸ்ரீ மத்வெலிவிட்ட, சந்தைப்படுத்தல் நிர்வாகிமிஸ்லக்ஷானி பெரேரா மற்றும் வணிக மேம்பாட்டு அதிகாரி அஷான் பிரேமச்சந்திர ஆகியோர் மருத்துவமனையை பிரதிநிதித்துவப்படுத்தினர். இந்த ஒப்பந்தத்தின் மூலம், இராணுவ உறுப்பினர்களுக்கு பல்வேறு பிரத்தியேக சலுகைகளை வழங்கும், தரமான மருத்துவ சேவைக்கான உயர்ந்த அணுகலை சுவசெவன மருத்துவமனை உறுதிசெய்யும். இந்தக் கூட்டாண்மையின் கீழ், சுவசஹன காப்புறுதித் திட்ட உரிமையாளர்களுக்கு இதில் இணைவதற்கான ஆரம்பகட்டணங்கள் தள்ளுபடி செய்யப்படுவதோடு, OPD வருகைகளுக்கான இலவச ஆலோசனைகள் மற்றும் பல்வேறு மருத்துவ சேவைகளில் முக்கியதள்ளுபடிகள் ஆகியன வழங்கப்படும்.

CT Scans, MRI, Mammograms, X-rays, Ultrasounds உள்ளிட்ட ஆய்வக சோதனைகள் மற்றும் கதிரியக்க சேவைகளில் 20% தள்ளுபடியுடன் கூடிய கட்டணக்கழிவுவழங்கப்படும். ECHO மற்றும் ECG சோதனைகளுக்கும், உள் நோயாளி பராமரிப்புக்கான அறைகளுக்கான கட்டணங்களுக்கும் இதே தள்ளுபடி வழங்கப்படும். அது மாத்திரமன்றி, இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் ரூ. 50,000 தள்ளுபடி மூலம் பயனடைவார்கள். அதே நேரத்தில் மருத்துவமனையிலிருந்து 10 கிமீ சுற்றளவில் உள்ளவர்கள் இலவச அம்பியூலன்ஸ் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தக் கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த சுவசெவன மருத்துவமனையின் பிரதம நிறை வேற்றுஅதிகாரிநளின் பஸ்குவல், "இலங்கை இராணுவம் எமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில்விலை மதிப்பற்ற பங்களிப்பை ஆற்றியுள்ளது. மேலும் இந்த முயற்சியின் மூலம் அவர்களின் சுகாதாரத் தேவைகளை ஆதரிப்பது எமது பாக்கியமாகும். சுவசெவன மருத்துவமனை ஆகிய நாம், உயர்தரம் மிக்க, அனைவரும் அணுகக்கூடிய மருத்துவ சேவையை வழங்க உறுதிபூண்டுள்ளோம். அத்துடன், இந்த கூட்டாண்மை எமது நாட்டிற்கு சேவை செய்பவர்களுக்கு நாம் சேவை செய்வது தொடர்பில் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது." என்றார்.

சுவசஹன நலன்புரி காப்புறுதித் திட்டம் ஆனது, இராணுவ வீரர்களுக்கு விரிவான மருத்துவ மற்றும் நிதி உதவியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான சுகாதார முயற்சியாகும். இந்தத் திட்டம் மருத்துவமனையில் சேர்க்கப்படுதல், கடுமையான நோய்கள் மற்றும் அவயவம் செயலற்றுப் போதல் தொடர்பான செலவுகளுக்கு காப்புறுதிகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றுபவர்களுக்கு மன அமைதியை வழங்குகிறது.

சுவசெவன மருத்துவமனை அதி நவீன மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் தனிப் பயனாக்கப்பட்டநோயாளர் பராமரிப்புடன், கண்டியில் சுமார் நான்கு தசாப்தங்களாக, சுகாதாரப் பராமரிப்புத் துறையில் நம்பகமான பெயராக திகழ்ந்து வருகிறது. மிக வசதியாக நகரின்மையத்தில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை, உயர் பயிற்சி பெற்றநிபுணர்களி ன்குழுமூலம்முழுஅளவிலானமரு த்துவசேவைகளைவழங்கிவருகிற து. இலங்கையின் மலைநாட்டுத் தலைநகரில் ஆறுதளிக்கும் வகையிலும், நோயிலிருந்து மீட்சி பெறவுமாக வடிவமைக்கப்பட்ட 150 சொகுசான, தரமானஅறைகளுடன், மருத்துவச் சிறப்பின் மிக உயர்ந்ததரத்தை வழங்குவதில் சுவசெவன உறுதிபூண்டுள்ளது.

# 2025 வினா - விடை போட்டியில் சம்பியனான HNB பொதுக் காப்புறுதி

இலங்கையின் பொதுக் காப்புறுதி துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் HNB General Insurance Limited (HNBGI), இலங்கை காப்புறுதி கல்வி நிறுவகத்தின் (SLII) ஏற்பாட்டில் கடந்த 2025 ஜூன் 06ஆம் திகதி, கொழும்பு Marino Beach Hotel இல் இடம்பெற்ற காப்புறுதி/ தரகு கம்பனிகளுக்கு இடையிலான வினா - விடை போட்டியில் சம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது.



இந்த கௌரவமிக்க வருடாந்த போட்டியில் முதன்முறையாக வெற்றி பெறுவது HNBGI நிறுவனத்திற்கான ஒரு முக்கிய சாதனையாகும். அறிவையும் தொழில்முறை சிறப்பையும் அடிப்படையாகக் கொண்ட பணிச் சூழலை வளர்க்கும் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது. இந்த வினா - விடை போட்டியில் நாடுமுழுவதும் இருந்து காப்புறுதி மற்றும் தரகு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 24 குழுக்கள் பங்கேற்றன. காப்புறுதி, வரலாறு, புவியியல், விஞ்ஞானம், இலக்கியம், கலை, பொழுதுபோக்கு, IQ, நடப்பு விவகாரங்கள் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் தீர்க்கமான அறிவை சோதிக்கும் நிகழ்வாக இந்த போட்டி அமைந்திருந்தது.

HNBGI நிறுவனத்தின் வெற்றி பெற்ற குழுவில் அனுஷிகா விக்ரமசிங்க, இந்திக வீரகோன், சுதாரக ஜயவிக்ரம, ஜனார்த்தனன் தவராஜ், மலிந்த சமரவீர, பிரதீப் கசுன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவினர் சிறந்த ஒருங்கிணைப்புடன், விமர்சன ரீதியான சிந்தனை மற்றும் விடயங்களில் சிறந்த திறன் ஆகியவற்றின் மூலம் நிகழ்வு முழுவதும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்த வெற்றி தொடர்பில் கருத்துத் தெரிவித்த HNBGI நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சித்துமின ஜயசுந்தர, "இந்த அற்புதமான வெற்றியை பெற்றமைக்காக எமது பிரகாசமிக்க குழுவினருக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். HNBGI ஆகிய நாம் அறிவு, வளர்ச்சி, விசேடத்தும் ஆகியவற்றின் கலாசாரத்தை நாம் மேம்படுத்தி வருவதை இது பிரதிபலிக்கிறது. எமது குழுவினர் கொண்டுள்ள உண்மையான தொழில்முறைத் திறனை இது காட்டுகின்றது என்பது பெருமையளிக்கிறது. இப்போட்டியில் மட்டுமல்லாது, தினமும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையளிக்கும்போதும் இது வெளிப்படுத்தப்படுகின்றது." என்றார்.

HNBGI நிறுவனம் அனைத்துப் பிரிவுகளிலும் கொண்டுள்ள திறமைகளும், விசேடத்துவமும் இந்த வெற்றி மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. காப்புறுதித் தொழில்துறையில் அறிவு, திறன் மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பு இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இப்போட்டியை ஏற்பாடு செய்த இலங்கை காப்புறுதி கல்வி நிறுவகம் (SLII), நாட்டின் காப்புறுதி கல்வி மற்றும் மேம்பாட்டு நிறுவனமாகவும், கைத்தொழில்துறை தரங்களை உயர்த்தும் பலதரப்பட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. காப்புறுதி/ தரகு நிறுவனங்களுக்கு இடையேயான வினா விடை போட்டி போன்ற முயற்சிகள், தொழில்துறை தரங்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிகழ்வு தொழில்துறை சகாக்களிடையே தொழில்முறை ரீதியான நட்புறவு, அறிவுப் பகிர்வு மற்றும் ஆரோக்கியமான போட்டியை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய தளமாக அமைந்துள்ளது.

HNB பொதுக் காப்புறுதி (HNBGI) நிறுவனம் இலங்கையில் வாகனம், மருத்துவம், வீடு, தீ, கடல் மற்றும் பயணக் காப்புறுதி உள்ளிட்ட பொதுக் காப்புறுதி தீர்வுகளை வழங்கும் ஒரு நம்பிக்கைக்குரிய நிறுவனம் ஆகும். HNB Assurance PLC நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமாகவும், HNB குழுமத்தின் ஒரு அங்கமாக வகிக்கும் HNBGI நிறுவனம், நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு பாதுகாப்பு மற்றும் மன அமைதியை வழங்கி, இலங்கையில் மிகவும் வாடிக்கையாளர்களை மையமாக செயற்படும் காப்புறுதி நிறுவனமாக மாறுவதை தனது நீண்டகால தூரநோக்காகக் கொண்டு செயற்பட உறுதி பூண்டுள்ளது.

டேராடூன்

மேக வெடிப்பில்

# பெருவெள்ளம்: 100க்கும் மேற்பட்டோர் மாயம்



உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாஷி மாவட்டத்தில் மேகவெடிப்பால் பெருவெள்ளம் ஏற்பட்டு 5 பேர் உயிரிழந்த நிலையில், 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனவும் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் இதுவரை 130 பேரை உயிருடன் மீட்டுள்ளனர் என்றும் இந்திய மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக உத்தராகண்ட் மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் கங்கோத்ரி பகுதியில் செவ்வாய்க்கிழமை (05) பிற்பகலில் மேகவெடிப்பு ஏற்பட்டது. இதனால் கீர் கங்கா நதியில் திடீரென பெருவெள்ளம் ஏற்பட்டு தரளி கிராமத்தை நோக்கி சீறிப் பாய்ந்துள்ளது.

இதில் ஒட்டுமொத்த கிராமமும் பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இராணுவம், விமானப்படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தீயணைப்பு படை மற்றும் பொலிஸ் துறையை சேர்ந்த நூற்றுக்கணக்கான வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 5 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏராளமானோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், 100-க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இரவு, பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம்இவ்வாறு மீட்புப் படையினர் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி ஆறுதல்: உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வெள்ள பாதிப்பு நிலைவரங்களை கேட்டறிந்துள்ளதுடன், அனைத்து மக்களும் பத்திரமாக மீட்கப்பட பகவானை பிரார்த்திக்கிறேன்ள ன்றும் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

ட்ரம்பின் வரி மிரட்டலை சமாளித்து

# ரூ.20,000 கோடியில் மோடி திட்டம்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் இந்த வரி விதிப்பு இன்று வியாழக்கிழமை (07) முதல் அமுலுக்கு வரவுள்ள நிலையில், ஏற்றுமதியாளர்களை பாதுகாக்க இந்தியா ரூ.20 ஆயிரம் கோடி மதிப்பிலான ஒரு மிகப்பெரிய ஏற்றுமதி திட்டத்தை தயாரித்து வருகிறது.

தற்போதைய வர்த்தக நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் இருந்து ஏற்றுமதியாளர்களைப் பாதுகாக்க புதிய விரிவான உத்திகளுடன் கூடிய இந்த ஏற்றுமதி திட்டத்தை மத்திய அரசு அடுத்த சில வாரங்களில் செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


'பிராண்டு இந்தியா' பெயரில் பொருட்களை சந்தைப்படுத்துமாறு வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகம் ஏற்றுமதியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. ரூ.20 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த திட்டம் ஏற்றுமதியாளர்களை சர்வதேச வர்த்தக ஏற்ற இறக்கங்கள் மற்றும் சந்தை நிச்சயமற்ற தன்மைகளிலிருந்து பாதுகாக்கும் என்று அரசு நம்புகிறது.

இதனை வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டம், கடன் அணுகலை எளிதாக்குவதையும், சர்வதேச சந்தைகளில் வரி அல்லாத தடைகளை நிவர்த்தி செய்வதையும் மையமாகக் கொண்டிருக்கும் என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் நிதி அமைச்சகங்களுக்கு இடையேயான கூட்டு முயற்சியில் இந்த திட்டம் உருவாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. "இந்த சவாலான காலகட்டத்தில் இத்தனை ஆயிரம் கோடி மதிப்பிலான நமது ஏற்றுமதியை ஆதரிக்க முடிந்தால் அது இந்தியாவுக்கு மிக சாதகமாக இருக்கும்" என்று இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பு (எப்ஐஇஓ) இயக்குநர் ஜெனரல் அஜய் சஹாய் கூறியுள்ளார்.

கீவ்

# "ரஷ்ய இராணுவத்தில் சீனா, பாக். கூலிப்படைகள்"



சீனா, பாகிஸ்தானைச் சேர்ந்த கூலிப் படைகள், ரஷ்யாவுக்கு ஆதரவாக போரில் ஈடுபட்டுள்ளதாக, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டினார்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்த போர், மூன்று ஆண்டுகளைக் கடந்தும் தொடர்கிறது. இந்தப் போரை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் தோல்வி அடைந்தன.

இந்த நிலையில், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி, அண்மையில், வோவ்சான்ஸ்க் நகரில் இராணுவ வீரர்களை சந்தித்துப் பேசினார்.

இது குறித்து, சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ஜெலன்ஸ்கி கூறியுள்ளதாவது,

ட்ரோன் விநியோகம், ஆட்சேர்ப்பு மற்றும் படைப்பிரிவுகளுக்கான நேரடி நிதியுதவி தொடர்பான பிரச்னைகள் குறித்து இராணுவ தளபதிகளுடன் கலந்துரையாடினேன்.

சீனா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் ஆப்ரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதை நம் இராணுவம் கண்டறிந்துள்ளது. அவர்கள் ரஷ்யாவுக்காக போராடும் கூலிப்படையினர். எங்கள் நாடு இதற்கு பதிலளிக்கும். இவ்வாறு கூறியுள்ளார்.

ஆனால், இந்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் அரசு மறுத்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த எந்த ஆதாரங்களையும் உக்ரைன் சமர்ப்பிக்கவில்லை என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

காசா

# காசாவை கைப்பற்ற இஸ்ரேல் உத்தரவு

இஸ்ரேல் பிணைக்கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் இடம் உட்பட, காசாவை முழுமையாக கைப்பற்ற அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2023 அக்டோபரில் இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பினர், தாக்குதல் நடத்தி 250 பேரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். அமைச்சரவை கூட்டம் இதைத் தொடர்ந்து ஆரம்பித்த போரில், காசா பகுதியில் 60,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், அங்கு பசி, பட்டினி, மருத்துவ வசதி கிடைக்காதது என, ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காசா மற்றும் பிணைக்கைதிகள் தொடர்பான அடுத்தக்கட்ட நகர்வு குறித்து விவாதிக்க பாதுகாப்பு அமைச்சரவையின் கூட்டத்தை கூட்டினார்.

அப்போது, பிணைக்கைதிகள் இருக்கும் பகுதிகள் உட்பட காசா முழுதையும் கைப்பற்றவேண்டும் என உத்தரவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# முன்னேறினார் ப்றூக்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஹறி ப்றூக் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில் 164 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இதே டெஸ்டில் 120 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வால், எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் சிம்பாப்வேக்கெதிரான முதலாவது டெஸ்டில் 80 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் டரைல் மிற்செல், 13ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜோ றூட், 2.ஹறி ப்றூக், 3.கேன் வில்லியம்சன், 4.ஸ்டீவ் ஸ்மித், 5.யஷஸ்வி ஜைஸ்வால், 6.தெம்பா பவுமா, 7.கமிந்து மென்டிஸ், 8.றிஷப் பண்ட், 9.டரைல் மிற்செல், 10.பென் டக்கெட்.

இதேவேளை, குறித்த சிம்பாப்க்கெதிரான போட்டியில் ஒன்பது விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் மற் ஹென்றி, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர இந்தியாவுக்கெதிரான குறித்த போட்டியில் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் குஸ் அட்கின்ஸன், 12ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி பத்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.பற் கமின்ஸ், 4.மற் ஹென்றி 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.நொமன் அலி, 7.ஸ்கொட் போலண்ட், 8.நேதன் லையன், 9.மார்கோ ஜன்சன், 10.மிற்செல் ஸ்டார்க், குஸ் அட்கின்ஸன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ், 3.பென் ஸ்டோக்ஸ், 4.வியான் முல்டர், 5.பற் கமின்ஸ்.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கெதிரான மூன்று இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத்தீவுகளின் அகீல் ஹொஸைன், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட், 3.அகீல் ஹொஸைன், 4.வருண் சக்கரவர்த்தி, 5.அடம் ஸாம்பா, 6.வனிது ஹசரங்க, 7.ரவி பிஷ்னோய், 8.ரஷீட் கான், நாதன் எலிஸ், 10.அர்ஷ்டீப் சிங்.

மேற்கூறப்பட்ட இருபதுக்கு-20 போட்டிகளில் 36 ஓட்டங்களைப் பெற்றதுடன், 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் றொஸ்டன் சேஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஒன்பதாமிடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங் ஐரீம், 3.மொஹமட் நபி, 4.றொஸ்டன் சேஸ், 5.லியம் லிவிங்ஸ்டோன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.அபிஷேக் ஷர்மா, 2.ட்றெவிஸ் ஹெட், 3.திலக் வர்மா, 4.பில் ஸோல்ட், 5.ஜொஸ் பட்லர், 6.சூரியகுமார் யாதவ், 7.பதும் நிஸங்க, 8.டிம் செய்ஃபேர்ட், 9.ஜொஷ் இங்லிஸ், 10.யஷஸ்வி ஜைஸ்வால்.

கனடா பகிரங்க டென்னிஸ் தொடர்:

# கீஸ் வெளியேற்றம்



கனடா பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான மடிஸன் கீஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

புதன்கிழமை (06) அன்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் டென்மார்க்கின் கிளாரா டௌசனிடம் 1-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் கீஸ் வெளியேறினார்.

இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# நியூசிலாந்துக்கு சவாலளிக்குமா சிம்பாப்வே?



சிம்பாப்வே, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது புலவாயோவில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து வென்ற நிலையில், அவ்வணியை சவாலுக்குட்படுத்துவதற்கே பாரியளவு முன்னேறத்தைக் காண்பிக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக, அணித்தலைவர் கிறேய்க் எர்வின், சிகண்டர் ராசா, பிரயன் பென்னிட், பென் கர்ரன் உள்ளிட்டவர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பிரெண்டன் டெய்லர் மூன்றரை ஆண்டுகள் தடைக்குப் பின்னர் குழாமில் இடம்பெற்றுள்ள நிலையில் அணியில் அவர் நிக் வெல்ஷை பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமாக நியூசிலாந்து அணியின் தலைவர் டொம் லேதம் முதலாவது போட்டியில் விளையாடியிருக்காத நிலையில் இப்போட்டியிலும் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுகின்றது.

முதலாவது போட்டியில் விளையாடிய நாதன் ஸ்மித், வில் ஓ ரூர்க் ஆகியோர் காயமடைந்துள்ள நிலையில் அவர்களை மத்தியூ பிஷர், ஜேக்கப் டஃபி பிரதியிடுவரென எதிர்பார்க்கப்படுவதோடு, மிஷெல் பிறேஸ்வெல்லை ஸகாரி போக்ஸ் பிரதியிடுவோரென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 07, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுனுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.